பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞூ சித்திரை மீ 07 உ. சனிக்கிழமை [20-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்: 137

# பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசின் நிபந்தனை குறைப்பு!

## வன்முறையைக் கைவிடுவதாக மட்டுமே அறிவித்தால் போதும் என்கிறார் பிரேமா

கொழும்பு, ஏப்ரல் 20

தமிழர் பிரச்சினை சம்பந்தமான சமரசப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு, அரசாங்கம் தனது முந்திய நிபந்தனையைக் குறைத்துள்ளது.

வன்முறையைக் கைவிடும் பிரகடனத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதாக அறிவித்தால் மட்டுமே அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த முன்வரும் என்று அரசாங்கத் தரப்பில் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

[2 ஆம் பக்கம் பார்க்க]

## தனது நிபந்தனைகளை ஜனாதிபதி கைவிட்டார்!

ஜனாதிபதி பிரேமதாசா நேற்று நிகழ்த்திய நாடாளுமன்ற அங்குரார்ப்பண உரையில் இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் குறித்து வெளியிட்ட கருத்துகள் சமரச நோக்கை வலியுறுத்துவதாக அமைந்துள்ளன என்று பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் நேற்று

[6 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலைப் பகுதியில்

## தமிழ்க் கிராமங்களில் படையினர் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், ஏப். 20

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பகுதியில் கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் ஆயுதப் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது இத்திக்குளத்தில் மூன்று தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 11 பேர் கைது செய்யப்பட்டனர். 20 வீடுகள்,

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூவரசங்குளத்தில் நின்ற படை பாவற்குளம் சென்றது

## போகும் வழியில் வீடுகளில் சூறை

யாழ்ப்பாணம், ஏப். 20

வவுனியா பூவரசங்குளம் குருக்களூர், சாளம்பைக்குளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 55 வாகனங்கள் சகிதம் நேற்று முன்தினம் வாரிக்குட்டியூர் ஊடாக பாவற்குளம், ஊளுக்குளம் முகாம்களுக்குச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் செல்கையில் வழியில் வீடுகளை உடைத்து மக்களின் பொருள்களைக் கொள்ளையடித்ததாகவும் —

கடை ஒன்றை எரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றியைத் தொட்டு நிற்கிறது

### அன்னை பூபதி நினைவுக் கூட்டத்தில் ராஜன்

யாழ்ப்பாணம், ஏப். 20

"தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியைத் தொட்டு நிற்கிறது."

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

அன்னை பூபதியின் மூன்றாம் ஆண்டு நினைவு தின விழா நேற்று இரவு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சமயம் அதில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ராஜன் மேலும் கூறியதாவது:-

"ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக அகிம்சைப் போராட்டங்கள் கடந்த காலத்தில் நடைபெற்றபோதும் அதனால் பலன் ஏதும் கிடைக்கவில்லை.

அன்னை பூபதி இந்திய அரசுக்கு எதிராக மேற்கொண்ட அகிம்சைப் போர் வெற்றி பெற்று இந்தியபடையை இம் மண்ணில் இருந்து வெளியேற்றியது. அதை அடுத்து இலங்கை அரசு விடுதலைப் புலிகளை பேச்சுக்கு அழைத்தது.

நாம் சுதந்திரம் பெறுவதற்காக இன்று சுகபோகங்களை இழந்து நிற்கிறோம். சுதந்திரம் கிடைக்கும்போது சுகபோகங்களை அனுபவிக்கலாம் என்ற நிலை மக்கள் மனதில் உருவாக வேண்டும்" — என்றார்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் யோகி, ஐயா, புதுவை இரத்தினதுரை ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள்.

[ஒ-3-154]

## முச்சந்தி முரளி



காலம் பிந்தி ஞானம்...... கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிறக்குது போலை......!

## வளலாய் நோக்கி நேற்றும் ஷெல்

நேற்று நண்பகல் 12 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து வளலாய் பகுதியை நோக்கி ஆறு ஆட்லறி ஷெல்கள் ஏவிவிடப்பட்டன.

### மடு அகதிகள் பட்டினியில்

## 10 லொறிகள் வவுனியாவில் உணவுப் பொருளுடன் 'தவம்'

யாழ்ப்பாணம், ஏப். 20

மடு அகதி முகாமுக்கு கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றி வந்த 10 லொறிகள் வவுனியாவில் தடைப்பட்டு நிற்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மன்னார்ப் பகுதியில் இராணுவ நடவடிக்கை இடம்பெறுவதால் அங்கு செல்ல வேண்டாம் என்று தெரிவித்து இந்த வாகன அணியைப் படையினர் தடுத்து வைத்துள்ளனராம்.

மடு அகதி முகாமில் உணவு கையிருப்பில் இல்லாததால்- அங்கு அகதிகள் பட்டினி நிலையில் வாடுவதாகவும்—

இதனால் வாகன அணியை அங்கு செல்ல அனுமதிக்குமாறும்—

அகதி முகாமை பராமரித்து வரும் ஐ. நா. அகதிகள் தூதரக அதிகாரிகள் கேட்டுள்ளனர். [உ-3]

## மங்கி பிரிட்ஜ் ராணுவம் மீது புலிகள் திடீர் தாக்குதல்

### ஐவர் மரணம்; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 20

நேற்று முன்தினம் காலை 7 45 மணியளவில் திருகோணமலை மாவட்டம் மங்கி பிரிட்ஜ் இராணுவ முகாமிலிருந்து கிளாங்குளம் முகாமுக்குச் சென்ற படையினர் மீது இரு இடங்களுக்கும் இடையில் வைத்து புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்தனர், விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சீனக்குடா எண்ணெய் குதம் புனரமைக்க இந்தியா திட்டம்

திருகோணமலை மாவட்டம், சீனக்குடா பகுதியில் உள்ள பிரமாண்டமான நூறு எண்ணெய்க் குதங்களை 180 கோடி ரூபா செலவில் புனரமைக்கும் திட்டம் பற்றி இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

[illegible] கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக [illegible] நேற்று வெளியிட்டார். [உ-எ]

## வடக்கு - கிழக்கில் 9 படையினர் பலி!

### இராணுவ அதிகாரிகள் தகவல்

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 9 படையினர் கொல்லப்பட்டனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கில் ஆண்டான்குளத்தில் 5 படையினரும்—

திருகோணமலை மாவட்டத்தில் நடந்த சண்டை ஒன்றில் 4 படையினரும் கொல்லப்பட்டனர் என்றும் இராணுவ அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர். [ஒ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனி - ஞாயிறு

10-00 — CHEMISTRY - GENERAL
திரு. மகாதேவா

9-00 — PHYSICS - MECHANICS

10 00 — PHYSICS - HEAT [வெப்ப அளவியல்]
திரு. கணேசன்

8-00 — BOTANY - அலகும் MORPHOLOGY
திரு ஸ்ரீதரன்

ஆரம்பம்: 20 - 04 - 1991

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

[16483]



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

**91** மீட்டல்
SAT., & SUN.
ஆரம்பம்: 28-04-91
[காலை 8-00 மணி]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| பொருளியல் | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | திரு. தேவராஜா |
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரீகம் / இந்து சமயம் | திரு காரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ் | திரு. குழந்தை |
| புவியியல் | திரு. குணராஜா |
| சரித்திரம் | திரு. விஜயன் |

மு. குறிப்பு:- i அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ii கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

[சி-4843]



மாதாந்த பயிற்சிப் பரீட்சை

# இலவச கருத்தரங்கு

GET SET TEST - I

ஒவ்வொரு பௌர்ணமி [போயா] தினங்களிலும் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றக் கூடியதான பயிற்சிப் பரீட்சை.

**A/L - 91** விஞ்ஞானப் பிரிவு மட்டும் அனைத்துப் பாடங்களும் பகுதி I

முதல் பரீட்சை: 26 - 04 - 1991

**ஆண்டு-5** [புலமைப் பரிசில் போட்டிப் பரீட்சை]

முதல் பரீட்சை: 28 - 04 - 1991

**O/L Dec. 91** அனைத்துப் பாடங்களும் பகுதி - I

[ஆண்டு - 11] [ஆண்டு-10 முழுப்பாடத்திட்டமும்]

முதல் பரீட்சை: 29 - 04 - 1991

★ இப்பரீட்சைகளுக்கான நேரசூசிகை பதிவாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நாளைய உதயனில் தொடரும்

★ O/L Dec 90 தடைப்பட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மாதா மாதம் நடைபெற்று வரும் பயிற்சிப் பரீட்சை. வழமை போல் [மூன்றாவது] தடவையாக 29-04-91 அன்று நடைபெறும்.

★ அனேக பெற்றோர்களின் கோரிக்கைகளுக்கிணங்க இம் முறை ஆண்டு-11, ஆண்டு-5, மாணவர்களுக்கும் மாதாந்த பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.

★ எம்முடன் நேரடியாகவும், தபால் மூலமாகவும் தொடர்பு கொண்டு பரீட்சைகளுக்கான ஆலோசனை வழங்கி ஊக்கப்படுத்திய பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

Examination Unit.

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

[16479]


## இலங்கையரின் ஆயுட்காலம் அதிகரிப்பு

கொழும்பு ஏப்ரல் 20
இலங்கையில் ஆண்களின் ஆயுள்காலம் சராசரியாக 68 ஆண்டுகளாகவும், பெண்களின் ஆயுள்காலம் 73 ஆகவும் அதிகரித்துள்ளது சிசு மரணம் 1000க்கு 32 ஆகக் குறைந்தது. இது மாபெரும் சாதனை ஆகும்.

ஜனாதிபதி பிரேமதாசா நேற்று நிகழ்த்திய நாடாளுமன்ற அக்கிராசனப் பிரசங்க உரையில் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார். [இ-எ]

## வெற்றி தோல்வி இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20
வடபிராந்திய வர்த்தக பிரதிநிதிகள் கிரிக்கெட் அணிக்கும் யாழ்ப்பாண வர்த்தக வங்கி கிரிக்கெட் அணிக்கும் இடையில் பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. [இ]

## நிவாரண அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தென் தமிழீழ மாணவர்களுக்கு வழங்கப்பட்ட— இடம் பெயர்ந்தோருக்கான— நிவாரண அட்டைகள் இன்று 20 ஆம் திகதி பிற்பகல் 4மணிக்கு பல்கலைக்கழகத்தில் வைத்து மீளாய்வு செய்யப்படவுள்ளன. [இ-த]

## பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

1989 ஆம் ஆண்டுக்கான கலைமாணி, வர்த்தகமாணி விஞ்ஞானமாணி, வர்த்தக முகாமைத்துவமாணி, பரீட்சை முடிவுகள் அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் விசேஷ கலைமாணிப் பரீட்சையில் 81 பேரும் வர்த்தகமாணிப் பரீட்சையில் 67 பேரும், வர்த்தக முகாமைத்துவமாணிப் பரீட்சையில் 50 பேரும் சித்தியடைந்துள்ளனர். [இ-த]

## பேச்சு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தான் வரவேண்டும் என்ற முந்திய நிபந்தனையும், இப்போது பெயர் எதுவும் குறிப்பிடப்படாமல் பொதுவான முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தமிழர் பிரச்சினை சம்பந்தமாக திரு. பிரேமதாசா நேற்றுத் தெரிவித்த வது:- புதிய கண்ணோட்டத்துடனும் இன்றைய யதார்த்தமான சூழ்நிலைக்கு ஏற்றவாறும் பிரச்சினையை அணுகவேண்டும் என்ற கருத்து பலரிடையே பரவி வருகிறது.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சமரச இணக்கத்துக்கு வரவேண்டும் என்ற மனப்பான்மையும் தோன்றி வருகின்றன.

தற்போதைய யுத்தத்தினால் எக்குற்றமும் செய்யாத வடக்கு - கிழக்குப் பகுதி மக்கள் சொல்லொணாத் துயரத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அரசியல் நோக்கங்களை அடைவதற்கு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்செயல்களைக் கைவிடும் பிரகடனத்துடன் பேச்சுவார்த்தைகளை [illegible] வேண்டிய அடிப்படையான

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தி. மு. கவில் பாண்டியன்

சென்னை, ஏப் 20
முன்னாள் சபாநாயகரும் அ. தி. மு. க. [ஜானகி] அணியின் சார்பில் கலைக்கப்பட்ட சட்ட சபையில் அங்கம் வகித்த ஒரே ஒரு உறுப்பினருமான திரு. பி. எச். பாண்டியன் தி. மு. க. வின் ஆதரவில் சேரன்மாதேவி தொகுதியில் போட்டியிடுவார்.

தி.மு.க இதனை நேற்று அறிவித்தது. [உ-எ]


# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 17 - 04 - 1989

இறப்பு: 20 - 04 - 1990

**விக்னராஜா - லவன்ராஜ்**

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:

தகப்பன், தாய், பெரியப்பாமார், பெரியம்மாமார், அம்மம்மா, மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சாள்மார்.

வேம்பன்லேன்,
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

[16481]



# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 27 - 03 - 1923

உதிர்வு: 20 - 04 - 1990



**அமரர் S. S. மரியான் தியாகராஜா**

[இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர், ஊர்காவற்றுறை.]

அன்பின் இலக்கணமாய், அறிவின் சிகரமாய் பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் இறைத் தொண்டனாய், எம் வாழ்வின் வழிகாட்டியாய் விளங்கிய எம் வீட்டின் தலைவனை காலன் பறித்து ஓராண்டு பூர்த்தி அடைந்தும் நினைவுகள் எம் மனதை விட்டு நீங்கவில்லை. இவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
உறவினர்கள் நண்பர்கள்.

இல. 36/1 கருவில் வீதி,
ஊர்காவற்றுறை,

[16474]



# மரண அறிவித்தல்

**திருமதி நடராசா கணேஸ்வரி (மணி)**

இணுவில் மேற்கு வட்டுவினியைச் சேர்ந்த திருமதி நடராசா கணேஸ்வரி [மணி] 19 - 04 - 91 இறைபதம் எய்தினார். இவர் சின்னையா சிதம்பரம் தம்பதிகளின் புதல்வியும், இளைப்பாறிய ஆசிரியர் திரு. க. நடராசா [சைவ மகாஜன வித்தியாலயம் இணுவில்] வின் அன்பு மனைவியும், திருமதி சிவகாமசுந்தரி [சுந்தரி] குமாரலிங்கம் அவர்களின் தாயாரும், திரு. கு. குமாரலிங்கம் அவர்களின் மாமியும், திரு. தியாகராசா, திரு. கணேசலிங்கம், திரு. பஞ்சலிங்கம் திரு. சிதம்பரநாதன், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மயூரன். நிருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

மரணக் கிரியைகள் இன்று 20 - 04 - '91 சனி காலை 11.00 மணியளவில் நடைபெற்று காரைக்கால் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க நடராசா

வட்டுவினி,
இணுவில்.

[16504]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரணவாய்ப் பகுதியில் உப்பளம்:

# தமிழீழ ஆய்வு நிறுவனம் முயற்சி

உரும்பராய், ஏப்ரல் 20

உப்பு உற்பத்திக்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழீழ ஆய்வு நிறுவனம் இதற்கான ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது.

சரவெட்டியிலுள்ள சரணவாய், உப்பு உற்பத்திக்கு ஏற்ற இடம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கே உப்பளத்தை அமைத்தால் தமிழ்ப்பகுதிகள் முழுவதற்கும் தேவையான உப்பை உற்பத்தி செய்யமுடியும் என அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளால் ஆனையிறவில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதும், உப்பு விலையவமடங்கு உயர்ந்துள்ளதும் தெரிந்தவையே. [இ-90]

## மலேரியா மருந்து தட்டுப்பாடு

தாவளயடி, ஏப்ரல் 20

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் "பனடோல்" மலேரியாவுக்கான 'பிறிமாகுயின்' ஆகிய குளிசைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

இப் பகுதியில் காய்ச்சல், மலேரியா ஆகியன மிகவும் தீவிரமாகப் பரவி வருகின்றன.

சடந்த மாதம் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையில் மூவாயிரம் நோயாளர்கள் காய்ச்சலுக்காக சிகிச்சைபெற்றுள்ளார்கள். இவர்களில் ஆயிரத்தி ஐந்நூறு பேர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தனர். [இ-144]

## வெளிமாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு உடைகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு உடைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் பருத்தித்துறை தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்திலும், மருதங்கேணியில் உள்ளவர்கள் தாளையடி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திலும் தங்கள் பெயர்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

இவர்களுக்கான உடைகள் 26 ஆம் திகதி தாளையடியிலும் 27 ஆம் திகதி பருத்தித்துறையிலும் விநியோகிக்கப்படும்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் திட்டத்திற்கமைய சர்வோதயத்தினால் இந்த உடைகள் வழங்கப்பட உள்ளன. [இ-த]

## சனசமூக நிலைய சமாஜம் அங்குரார்ப்பணம்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள 101 சனசமூக நிலையங்களையும் உள்ளடக்கி 'சனசமூக நிலைய சமாஜம்'' அமைக்கப்பட்டுள்ளது

இந்த சமாஜத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கோப்பாய் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது [இ-11]

## யு. எஸ். உதவித் திட்டத்தின் கீழ் சிறுதானிய உற்பத்திக்கு நீர் இறைக்கும் இயந்திரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

யு எஸ் உதவித் திட்டத்தின் கீழ் சிறுதானிய விவசாயச் செய்கைக்குப் பயன்படுத்த 75 றொபின்ரக நீர் இறைக்கும் இயந்திரங்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

கெயர் இன்ரநஷனல் அமைப்பின் மேற்பார்வையில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் விவசாயிகள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த இயந்திரங்கள் வழங்கப்படும்.

பருத்தித்துறையில் தரித்துள்ள வில்லி வில்லி கப்பலில் இருந்து இவை இறக்கப்பட்டன. [இ - 3]

### பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், ஏப். 20

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கடமையாற்றி சென்ற பாறிய ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டும் முகமாக, பிரிவுபசார வைபவம் ஒன்று அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது [இ-த]

### சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். [இ-த]

### ஆஸ்பத்திரி ஊழியர் சீருடை அணிய வலியுறுத்து

யாழ்ப்பாணம் ஏப்ரல், 20

யாழ் போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்கள் கடமை நேரத்தில் சீருடை தரித்தும், கடமைக்கான அடையாள அட்டையை அணிந்தும் இருக்க வேண்டும் என வைத்தியசாலைப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது [இ-15]

## போராளி என்ற சந்தேகத்தின் பேரில்

# சென்னையில் கைதான ஈழத்தமிழர் நஷ்டஈடு கோரி நீதிமன்றில் வழக்கு

சென்னை, ஏப். 20

போராளி என்ற சந்தேகத்தில் சென்னை மத்திய சிறையில் தம்மை அடைத்ததற்காக நஷ்டஈடு கோரி இலங்கைத் தமிழர் ஒருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

சென்னை, மயிலாப்பூரில் இலங்கைத் தமிழரான சிவகுமார் வசித்து வருகிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி அவரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்

அதனை எதிர்த்து அவரது உறவினர்கள் உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு ஒன்றை சமர்ப்பித்தனர்.

அதனை விசாரணை செய்த நீதிமன்றம், சிவகுமாரை உடனடியாக விடுதலை செய்யவும் உத்தரவிட்டது.

அதன் பின்னரும் சிவகுமார் சிறையில் இருந்து விடுவிக்கப்படவில்லை.

நீதிமன்ற உத்தரவுக்கு பின்னரும் தன்னைச் சிறையில் அடைத்து வைத்த ஒவ்வொரு நாளுக்கும் 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு தர அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி சிவகுமார் இப்போது வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட இரண்டு நீதியரசர்கள் பி, எஸ் மிஸ்ரா, ஜனார்த்தனம் ஆகியோர் சிவகுமார் தொடர்ந்து சிறையில் வைக்கப்பட்டுள்ளாரா என்பதை நேரில் சென்று பார்த்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி எழும்பூர் தலைமை நீதிபதிக்கு உத்தரவிட்டனர். [இ-எ]

# ஈழத்தமிழர்களுக்கு தமிழகத்தில் தொல்லை!

சென்னை, ஏப் 20

தமிழகத்தில் முகாம்களில் தங்காது வெளியில் தனியார் வீடுகளில் தங்கிவரும் ஈழத் தமிழ் அகதிகள் பொலீசாரினால் பல தொல்லைகளுக்காளாகி வருவதாக முறையிடப்பட்டு உள்ளது.

ஈழத் தமிழ் அகதிகள் தங்கும் வீடுகளுக்கு நள்ளிரவு நேரங்களில் பொலீஸார் சென்று அவர்களைத் தட்டி எழுப்பி விசாரணைக்கு என்று கூட்டிச் செல்கிறார்களாம்.

வயதானவர்களைப்பின்னர் பொலீஸார் விடுவித்தாலும் இளைஞர்களை போராளிகள் என்ற சந்தேகத்தின் பேரில் அகதி முகாம்களுக்கு அனுப்பி விடுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

பொலீஸாரின் இத்தொந்தரவு காரணமாக ஈழத்தமிழ் அகதிகளுக்கு வீடுகளை வாடகைக்கு விட்டுள்ள அவற்றின் உரிமையாளர்கள் வீடுகளை விட்டு வெளியேறும்படி அகதிகளை வற்புறுத்தத் தொடங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதிகளிலும் ஈழத்தமிழர் தங்க அனுமதி மறுக்கப்படுகின்றது என்றும் சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

முகாம்களுக்கு வெளியே தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

மாநிலத்தில் 243 அரசு முகாம்களில் ஒரு லட்சத்துக்கு 23 ஆயிரம் இலங்கை தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர்.

## இந்திய கம்யூனிஸ்ட் போட்டி

சென்னை, ஏப் 20

தமிழகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டு நாடாளுமன்றத் தொகுதிகளிலும் [நாகபட்டினம், சிவகாசி] பத்து சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A.

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 92**

புதிய பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு ரட்ணம் |
| கணக்கியல் | — | திரு ஸ்ரீ |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| அளவையியல் | — | திரு S. S. மனோகரன் |

ஆரம்பம்: 20 - 04 - 1991

சனிக்கிழமை 9-00 a m. [C/4839]



வலிகாமம் தெற்கு பிரதேச சபை
(சுன்னாகம், உடுவில், ஏழாலை உப அலுவலகங்கள்)

## ஆதன வரி இறுப்பாளர்களுக்கு ஒரு விசேட அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1991 ஆம் ஆண்டு 1 ஆம் காலாண்டிற்கான தொகைக்கு தண்டஇறவீடு எதுவும் இன்றி 30 - 04 - 1991 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை செலுத்துவதற்குக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது அத்துடன் 1991 ஆம் ஆண்டு 2ஆம், 3ஆம், 4ஆம் காலாண்டிற்கான தொகைகளை இக்காலப் பகுதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5% வரிக் கழிவு வழங்கப்படும்.

எனவே, சகல ஆதனச் சொந்தக்காரர்களும் இச் சலுகையைப் பயன்படுத்தி 30 - 04 - 1991க்கு முன் தமது ஆதன நிலுவைகளைச் செலுத்திச் சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் [15%] ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் [20%] கூடுதலாக அறவிடப்படும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

வே. வீரபத்திரபிள்ளை,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலி-தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம். [சி-5118]


## பேச்சு....

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேசிய பிரச்சினைகளைப் பற்றி சமுதாயத்தில் உள்ள அனைவருடனும் கருத்தாழம் மிக்க சம்பாஷணை ஒன்றை ஆரம்பித்திருப்பதாகவும், நீண்ட காலமாக நிலவிவந்த தப்பெண்ணங்கள் மறைந்து வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் அப்பாவிப் பொதுமக்களின் சார்பில், அவர்களுடன் சம்பந்தப்பட்ட சகல கட்சிகளும் பேச்சுக்களை நடத்த முன்வரும்படி அரசு முன்னர் விடுத்த அழைப்பை நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

வேறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்ட குழுக்களின் ஐக்கிய உரிமைகளையும் அங்கீகரிப்பது அவசியமாகும்.

சகல கட்சிகளும் குழுக்களும் பதில் கூற தகைமையுடைய தலைவர்கள் பேச்சு வார்த்தைகளில் பிரதிநிதித்துவம் பெற வேண்டும், உடன்படிக்கையை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் கொண்ட தலைவர்களாகவும் அவர்கள் இருத்தல் வேண்டும்.

ஜனாதிபதி தெரிவித்த மற்றும் சில அம்சங்கள் வருமாறு:-

★ பல்வேறு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கு உதவும் வகையில் உதவும் நாடுகளில் இருந்து 1990ஆம் ஆண்டு பெறப்பட்ட வெளிநாட்டு உதவியாக 3ஆயிரத்து 664 கோடி ரூபா கிடைத்தது வடக்கு - கிழக்கில் கலவரங்கள் ஏற்படாது இருந்திருப்பின் அதற்கும் கூடுதலான தொகை வெளிநாட்டு உதவியாகக் கிடைத்திருக்கலாம்.

★ தீவிரவாத செயல்களால் பாதிக்கப்பட்ட 14 ஆயிரத்து 23 குடும்பங்களுக்கு 1990 டிசம்பர் 31ஆம் திகதி வரை 51 கோடி 90 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது.

★ வளைகுடா நெருக்கடி மற்றும் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் ஏற்படாது இருந்திருப்பின் கடந்த ஆண்டு அரசின் செயற்பாடு இன்னும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கும்.

★ இந்திய அரசின் உதவியுடன் மன்னார் குடாவில் எண்ணெய் வள ஆய்வு வேலைகளை நடத்தும் கூட்டு முயற்சியில் இலங்கை ஈடுபட உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஜேசி இன கறவை மாடுகள் இரண்டு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க: சி. கமலநாதன் 'நில்கந்தா'' மானிப்பாய். [மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகாமையில்] [16472]

### தேவை

[Rosin] ரோசின், குளுக் கோஸ் பாணி, நாட்டுக் குங்குலியம் தேவை. தொடர்பு கொள்ளவும்! அண்ணா தொழிலகம், இணுவில். [சி/4836]

பழைய சோதனைப பேபபர், கொப்பி, புத்தகங்கள், சிமெந்துப் பைக்கெட்டுகள் தேவை தொடர்புகொள்ளவும்! அண்ணா தொழிலகம், இணுவில் [சி/4835]

### மணமகன் தேவை

இந்து 7 இல் செவ்வாய் ராகு சனி உள்ள பெண்ணுக்கு பொருத்தமுடைய செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் 5' 4'' உயரம் Fair in Complextion இல-305, C/o உதயன் யாழ்ப்பாணம். [16501]

### வேலை தேவை

ஆங்கில தட்டச்சில் அனுபவமுடைய இளைப்பாறிய 1 ஆம் தர இலிகிதருக்கு தகுந்த வேலை தேவை. விண்ணப்பிக்கவும். C/o உதயன் இல 304, யாழ்ப்பாணம். [16471]

### நோவு வைத்தியம்

ஓட்டசப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ் ரி மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4026]

### தாதிகள் பயிற்சிநெறி

க. பொ. த. சா/தா சித்தி அடைந்த பெண்களிடமிருந்து தாதிகள் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1991 - 4 - 29 காலை 10-00 — 12-00 மணி வரை 10/5, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நேரடியாக விண்ணப்பங்களைக் கையளிக்கவும் [16473]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்களை சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும் விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூட்டோ 89/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-4827]

### விநாயகர் அருள் மில்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறிந்தருகிறோம். விலாசம்: விநாயகர் அருள் மில், இல 8, டழும் றோட், கந்தர்மடம். யாழ்ப்பாணம். [16461]

### பிறப்பு - இறப்பு பதிவு அலுவலகம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதியில் இயங்கும் பிறப்பு, இறப்பு பதிவு அலுவலகம் கிழமை நாட்களில் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 3-00 மணி வரையும் சனிக்கிழமை காலை 9-00 மணி முதல் 12-00 மணிவரையும் இயங்கும் எனவும் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும் எனவும் பதிவாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-15]

---

வெளிவந்து விட்டது
வேகமாக விற்பனையாகின்றது
இலங்கை அதிபர்கள் சேவை
(S. L. P. S - I, II, III)
போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி
★ கிரகித்தல், ★ பொது அறிவு,
★ கல்விக்கொள்கையும், நிருவாகமும்;

## அஸ்ரன் வெளியீடு

விலை ரூபா 97/
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம். [சி/4840]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்:
20 09 - 1927

மறைவு:
24 - 03 1991



### அமரர் கிருஷ்ணசாமி [சாமி]

[முன்னாள் 'றேடியோ எஞ்சினியேர்ஸ்' உரிமையாளர்]

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவின்போது நேரில் வந்து எமது துயரத்தில் பங்கெடுத்தோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிச் சடங்கில் பங்குபற்றியோருக்கும் சகல விதமான உதவிகள் செய்தோருக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

22 - 04 - 1991 திங்கட்கிழமையன்று காலை 6 30 மணிக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், 23 - 04 - 1991 செவ்வாய்க்கிழமையன்று காலை 10 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியம், மதிய போசனம் ஆகியவற்றிலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

77/5, நவநீதன் வீதி,
புங்கன்குளம் றோட்,
கொழும்புத்துறை. [16455]

---

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சி. சௌந்தரராஜா [கிளி]

[திருகோணமலை, யாழ்கபே உரிமையாளர்]

ஆண்டவன் படைப்பு:
6 - 6 - 1943

அநியாய அழிப்பு:
26 - 4 - 1985

அப்பா, கல்லாகிப் போய்விட்ட கயவர்களின் ரவைகள் வெறியாகி வந்து உங்கள் மார்புதனைத் துளைத்திடினும் தாங்கள் எதிர்பார்த்த கனவுகள் நிலைத்திடும் திண்ணம், திண்ணம்

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

புங்குடுதீவு - 12 [16386]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### க. பொன்னையா
[S M L.T. பெரியாஸ்பத்திரி, கொழும்பு]

திதி: 20 - 04 - 1991

ஆறாத துயருடனே ஆண்டு மூன்று கழிந்ததய்யா
மாறாத நிலையுடனே மனத்துள்ளை நிறுத்தி நாங்கள்
பார் காக்கும் குலதெய்வம் கிழவிதோட்ட நாயகனின்
பாதந்தனைக் கண்ணீரால் அர்ச்சித்தே
தொழுதழுவோம்.

குடும்பத்தினர்.

''திருப்பதி''
கிழவிதோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. [16468]

---

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்டு
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந் தெய்வத்தின் அடி சேர்ந்த
ஓய்வு பெற்ற ஆசிரியை

### அமரர் நாகம்மா நல்லதம்பி

அவர்களின்

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

(20 - 04 - 1991)



செந்நிருவை நேரொத்த தெய்வத் தாயே!
சிறப்பாக மக்களை நீ வளர்த்தாய் அம்மா
சிந்தாத கண்ணீரை நாங்கள் நாளும்
சிந்திடவே எங்கோ நீ சென்று விட்டாய்
வந்தாற இனியில்லை வாய்ப்பும் இல்லை
வாழ்வதனில் மிகப்பெரிய துன்பம் மக்கள்
பந்தமதை மறந்தீரோ பதியின் பாசப்
பாங்கதனை மறந்தீரோ பண்பார் அன்னாய்!

மக்கள்மரு மக்களுடன் பேரர் பேர்த்தி
மாங்கலியத் தலைவனுடன் மெழுகு போன்று
நீக்கமற நீயுருகி ஒழிய தந்தாய்
நின்சேவை அளப்பரிது மறக்கப் போமோ
வாக்கதனில் ஒளியுண்டு வனப்பும் உண்டு
வல்லவளாய் நல்லவளாய் வாழ்ந்து காட்டி
ஏக்கமுற யாவருமே இரங்கி நிற்க
ஏகியது போல்வருவாய் எம்மைக் காக்க.

பூவோடும் பொட்டோடும் பொலிவே பெற்று
புனிதமுடன் காண்போமே என்றும் உன்னை
சாவுவரும் விரைவினிலே என்று நாங்கள்
சற்றளவும் எண்ணவில்லை சதியோ விதியின்
யாவருமே வியக்கவழி நடந்து பேசி
ஆங்கரும மனைத்து முடித்தமலன் பாதம்
ஆவலொடும் அருளோடும் அடைந்தே விட்டாய்
ஆரமுதை வந்தெமக்கு அளிப்பாய் அம்மா!

கண்களுமோ காணாது குன்றிப் போச்சு
காதுகளோ குரலின்றி மந்த மாச்சு
வண்மையோ வலமின்றி வரண்டு போச்சு
வாக்கினிலே விலையில்லை வன்மை போச்சு
திண்தோள்கள் உலாத்தின்றி மரத்துப் போச்சு
தீராத கவலையால் சிரிப்பே போச்சு
ஊனுடம்பு உணவின்றி உலர்ந்து போச்சு
உத்தமியுன் பிரிவாலே உணர்வும் போச்சே.

பிரிவாற்றாத,
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [சி-5114]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பெரியதாக ஒன்றுமில்லை!

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரைத் தொடக்கி வைத்து, ஜனாதிபதி பிரேமதாசா நேற்று உரை நிகழ்த்தினார்.

நாட்டின் இப்போதைய மிக முதன்மையான, முக்கியமான, சூடான, மோசமான தமிழர் பிரச்சினை குறித்து அரசின் நிலைப்பாட்டினை ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டார்.

ஆனால் அவரின் உரை தெளிவானதாக, நேரடியானதாக இல்லை. அரசின் நிலைப்பாட்டைத் தெளிந்த முறையில் காட்டவில்லை. சுற்றி வளைத்து, திட்டவட்டமின்றி, ஒளித்து விளையாடும் தன்மையுடனேயே உள்ளது.

அரசு- விடுதலைப் புலிகள் யுத்தம் ஆரம்பமாகி பத்து மாதங்கள் கழிந்துவிட்டன. எனினும் அதனை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும், தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற தெளிந்த சிந்தையுடன் அரசு இருப்பதாக ஜனாதிபதியின் உரை புலப்படுத்தவில்லை.

பிரச்சினையைத் தீர்க்க விருப்பம் உள்ளதாகக் காட்டிக்கொள்ளும் வழமையான தோரணையிலேயே நேற்றைய பேச்சும் அமைந்திருக்கிறது. தீர்வுக்கான கட்டமைப்பு எதனையும், வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத் துலக்கமாகத் தெரிவிக்கவில்லை. வழமையான வளவளாப் பல்லவி தான்! வார்த்தை ஜாலங்கள் தான்!

தமிழர் பிரச்சினைக்கு அரசு தீர்வு ஒன்றை முன்வைப்பது அவசியம். அதனை நாம் மட்டுமல்ல, தென் இலங்கையில் உள்ள அமைப்புகள், கட்சிகள், பிரமுகர்களும் கடந்த பல மாதங்களாகப் பேசியும், எழுதியும் வருகின்றனர்.

ஆனால் அந்தப் பொறுப்பில் இருந்து ''நைஸாக'' நழுவிவிடும் போக்கையே அரசு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் போகிறது; இழுத்தடித்துக் காலத்தைக் கடத்தப் போகிறது என்பது புலப்படுகிறது.

அரசாங்கம் தனது சொந்தத் தீர்வை முன்வைக்கவில்லை என்பது ஒரு புறமிருக்க-

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்குவது சம்பந்தமான தனது நிலைப்பாட்டைக் கூட அது தெளிவாகக் கூறவில்லை.

எனினும் ஒன்றை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதாவது, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை என்ற ரஞ்சன் காலத்து நிலை தளர்ந்து-

ஆயுதங்களைக் கைவிடுவதாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று அடுத்தபடிக்குக் கீழே-

வன்செயல்களைக் கைவிடுவதாகப் பிரகடனப்படுத்துவதுடன் பேச்சு நடத்தலாம் என்ற கட்டத்துக்கு அரசு இறங்கி வந்திருக்கிறது.

அதிலிருந்தும் கீழிறங்கி நிபந்தனையில்லாத பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தினாலே இரு சாராரும் விட்டுக்கொடுத்து, மனம் திறந்து பேச வழிபிறக்கும்.

எல்லாக் கட்சிகளும் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள வேண்டும் என்ற நிபந்தனை, சர்வகட்சி மாநாடு நடத்துவது போன்ற மேலும் காலத்தைக் கடத்தும் தந்திரம் என்றே கொள்ளப்பட வேண்டும்.

எனவே பிரேமதாசாவின் பேச்சில் பெரியதாக ஒன்றையும் காணமுடியவில்லையே!

# அச்சுவேலி ஆஸ்பத்திரி சேவைகள் பெரும் அளவு பாதிப்பு

## இரவில் முதலுதவிச் சிகிச்சைமட்டும்

அச்சுவேலி, ஏப்ரல் 20

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியில் வைத்திய சேவைகள், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், பகல் வேளையில் சில மணி நேரங்கள் மட்டும் நடைபெறுகின்றன.

தற்போழுது பகல் வேளையில் மட்டும் குறிப்பிடத்தக்க அளவு நேரம் இந்த ஆஸ்பத்திரி செயற்படுகிறது. வார்ட்டுகளில் நோயாளர் அனுமதிக்கப்படுவதும் இல்லை. இரவு வேளைகளில் வைத்திய சேவைகள் நடைபெறுவதும் இல்லை.

வைத்தியர்கள் பற்றாக்குறை, ஊழியர்கள் பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் போதாமை ஆகியவற்றினால் இரவு வேளைகளில் ஆஸ்பத்திரி செயற்பட முடியாமல் இருப்பதாககூறப்படுகின்றது.

இரவு வேளையில் முதலுதவிச் சிகிச்சைகள் மட்டும் இங்கு நடைபெறுகின்றன. அதுவும் வெளிச்சம் இல்லாததால் குப்பை, கழிவுப் பொருள்கள் எரிக்கும் வெளிச்சத்திலேயே இவை நடைபெறுகின்றதாம்.

ஆஸ்பத்திரிக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் கலப்படமுள்ள பச்சை நிறம் கொண்டதாக இருப்பதால் விளக்கு கூட எரிய மறுக்கின்றது என்று கூறப்படுகிறது.

[இ-11]

## சுவாமியும் போட்டியிடார்

சென்னை, ஏப் 20

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாம் எந்தத் தொகுதியில் இருந்தும் போட்டியிடப் போவதில்லை என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி நேற்றுத் தெரிவித்தார்.

தமிழகத்தில் சமாஜவாதி ஜனதாக்கட்சி 6 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் 50 சட்டசபைத் தொகுதிகளிலும் போட்டியிடும் என்றும் அவர் சொன்னார்.

தென்னிந்திய மாநிலங்களுக்கான தேர்தல் பொறுப்பாளராக தாம் செயற்பட இருப்பதாலேயே தேர்தலில் போட்டியிடவில்லை என்றார் அவர்.

[உ-எ]

## ஒப்பனை கலைஞருக்கு விருது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

ஒப்பனைக் கலைஞர் திரு. சாமுவேல் பெஞ்சமினைக் கௌரவிக்கும் முகமாக விருது வழங்கும் வைபவம் ஒன்று நாளை 21 ஆம் திகதி 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

ஈழத்து நாடக வரலாற்றில் அரை நூற்றாண்டுக்கு மேலாக ஒப்பனைக் கலையில் ஈடுபட்டுவரும் இவரின் சேவையைப் பாராட்டி, ''ஒப்பனைக் கலைவேந்தர்'' என்னும் விருது வழங்கப்படவுள்ளது.

'மகவம்' மதி கலைஞர் வட்டத்தினரால் 1988 ஆம், 89 ஆம் ஆண்டுகளுக்கான மக்கள் கலைஞராக இவர் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப் படவுள்ளார்.

திரு வேல் அமுதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில், யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கலாநிதி இ. பாலசுந்தரம், விரிவுரையாளர் என். சண்முகலிங்கன் உட்படப் பலர் உரையாற்றவுள்ளனர்.

[இ-த]

# மீன்பிடிக்க அனுமதி மறுத்தால் கச்சதீவில் இந்தியக் கொடி பறக்கும்!

## இந்திய மீனவர் சங்கம் எச்சரிக்கை

சென்னை, ஏப். 20

மத்திய, மாநில அரசுகள் இந்திய மீனவர்களைப் பாதுகாக்கத் தவறினால் அல்லது கச்சதீவுக்கடலில் மீன்பிடிக்க அனுமதி மறுத்தால் கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றுவோம்.

இராமேஸ்வரம் அகில இந்திய மீனவர்கள் சங்கம் இப்படி எச்சரித்துள்ளது.

கச்சதீவைச் சுற்றி மீன்பிடிப் படகுகளை நிறுத்துவது என்றும் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

இது சம்பந்தமாக மத்திய, மாநில அரசுடன் பதிலளிக்க சங்கம் காலக்கெடு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக சாதகமான பதில் இடைக்காத பட்சத்தில் எதிர் வரும் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் சங்கம் கூறியுள்ளது.

[இ எ]

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் [சிவன் கோவிலில்] வருடாந்த சங்காபிஷேகமும், மணவாளக் கோல உற்சவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளன.

[அ]

## மட்டக்களப்பில் 117 தமிழர் கைது

கொழும்பில், ஏப். 20

கிழக்கு மாகாணம், மட்டக்களப்புப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையின் போது ஆயுதப்படையினர் 117 தமிழர்களைக் கைது செய்தனர்.

இத் தகவலைக் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் வெளியிட்டனர் என்று இந்திய வனொலி அறிவித்தது.

[உ-எ]

★ இந்திராகாங்கிரஸ் ★ ஜனதாதள் ✶ பாரதிய ஜனதா

# இந்திய பொதுத்தேர்தல் மோதல்; இம்முறை மூன்று அணிகளிடையே!

## அரசியல் அந்தகாரத்தில் சந்திரசேகர்

**இந்தியாவின் பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 20 ஆம், 23 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது; இந்த நிலையில் — அது பற்றிய மேலோட்டமான கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.**

இந்தியாவின் 9 ஆவது நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு பதினொரு மாதங்களின் முடிவில்...

பிரதமர் வி. பி. சிங்கின் தலைமையிலான தேசிய முன்னணி அரசு கவிழ்ந்தது.

புதிய அரசு அமைக்க இந்திரா காங்கிரஸ், பாரதிய ஜனதா மற்றும் கம்யூனிஸ்ட் கூட்டணி ஆகியன முன்வராத நிலையில் —

ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேறிய 54 எம். பிக்களின் தலைவரான திரு. சந்திரசேகர் முன்வந்தார். திரு. சந்திரசேகர் அரசு அமைக்க ஆதரவளிப்பதாக திரு. ராஜீவ் காந்தி அறிவித்தார். ஒருநாள் அந்தக் கட்டத்தில் ''சந்திரசேகர் அரசு குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது நீடிக்க ஆதரவு வழங்குவீர்களா?' —

ஜனாதிபதி வெங்கட்ராமனின் இந்தக் கேள்விக்கு இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

ஆனால் — ராஜீவ் காந்தி கொடுத்த சில விளக்கங்களில் இருந்து இந்திரா காங்கிரஸின் ஆதரவு குறைந்தது 12 மாதங்களாவது சந்திரசேகர் அரசுக்குக் கிடைக்கும் என்று ஜனாதிபதி உணர்ந்தார்.

முடிவு -540 எம். பிக்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 54 எம். பிக்களை மட்டுமே வைத்திருந்த சந்திரசேகரின் ஜனதா தள் [எஸ்] கட்சி ஆட்சி அமைத்தது.

200 எம். பிக்களைக் கொண்ட இந்திரா காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவளித்தது.

சந்திரசேகரின் நீண்ட நாளைய கனவு நனவாகியது. வி. பி. சிங்கை பதவி கவிழ்க்கும் ராஜீவின் திட்டம் பூரண வெற்றி கண்டது.

ஆனால் சந்திரசேகர் அரசு குறைந்தது 12 மாதங்கள் நீடிக்கும் என்று வெங்கட்ராமன் போட்ட கணக்கு பிழைத்து விட்டது.

117 நாட்களில் சந்திரசேகர் அரசு பதவி விலகியது. இதன் காரணமாக இந்தியா இன்று பத்தாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்நோக்குகின்றது.

### 84 கோடி மக்கள்

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி வரையான சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் சனத்தொகை 84 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் 70 கோடி மக்கள் இந்துக்கள். 12 கோடி மக்கள் முஸ்லிம்கள்.

மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானோர் பிற்பட்ட வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார ரீதியில் 30 கோடி மக்கள் வறுமைக் கோட்டு எல்லைக்குக் கீழ் வாழ்கின்றனர். இவர்களில் 5 கோடி மக்கள் பட்டினி நிலையில் வாடுகின்றனர்.

### 54 கோடி வாக்காளர்

54 கோடி மக்கள் வாக்களிக்கும் தகைமையைப் பெற்றுள்ளனர். எட்டு பிரதான [illegible]

இவற்றை விட 40க்கு மேற்பட்ட மாநில மற்றும் உதிரிக் கட்சிகளும் களத்தில் இறங்குகின்றன.

இந்தத் தேர்தலில் மூன்று தேசியக்கட்சி அணிகள் மோத இருக்கின்றன.

ஒன்று — திரு. ராஜீவ் காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் மற்றும் சில மாநிலக் கட்சிகளின் கூட்டணி

இரண்டு — திரு. வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள், கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் மாநிலக் கட்சிகளின் கூட்டணி.

மூன்று — பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான அணி.

இதுவரை காலமும் இடம் பெற்று வந்த தேர்தல்கள் அனைத்திலும் காங்கிரஸ் அணி அதற்குஎதிரான எதிர்க் கட்சிகள் கூட்டணி — என இரண்டு அணிகளே போட்டியிட்டன. ஆனால் இம்முறை பாரதீயஜனதாக் கட்சி தனித்துப் போட்டியிட்டு இந்தியாவின் ஆட்சியைப் பிடிக்க முனைந்துள்ளது. எனவே 54 கோடி வாக்காளர்களும் மூன்று அணிகளாகப் பிரிந்து செயற்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

### கொள்கைகள்

இந்திரா காங்கிரஸ் கூட்டணி மதசார்பின்மையை வலியுறுத்துகிறது. பொருளாதார, அரசியல் மற்றும் மத சம்பந்தமான விவகாரங்களில் நடுநிலைப் போக்கை கையாளுவதே இந்த அணியின் கொள்கை.

தேசிய முன்னணி பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வது, மததீவிரவாதிகளுக்கு இடமளிக்காமை ஆகிய இலட்சியங்களுடன் தேர்தலில் போட்டியிடுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சி இந்து மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வது என்ற ஒரே இலட்சியத்துடன் போட்டியிடுகிறது. அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டும் பிரச்சினையை தேர்தல் சுலோகமாகவும் மாற்ற இக் கட்சி முயன்றுகின்றது.

இந்த நிலையில் பிரதமர் சந்திரசேகரின் ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சி எதிர்வரும் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை என்பதே பலரின் கணிப்பு. திரு. சந்திரசேகரின் கட்சியை தேர்தலில் ஓர் அணியாகக் கருத முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சாதி, சமயம், மொழி ஆகிய வேறுபாடுகளே எதிர்வரும் பொதுத் தேர்தலில் முக்கிய இடங்களைப் பெற உள்ளன. இவை சாதாரண மக்களின் உணர்ச்சிகளை இலகுவாகத் தட்டி எழுப்பக் கூடிய சாதனங்களாகும்.

ஆகவே வரப்போகும் பொதுத் தேர்தல் இந்தியாவின் சரித்திரத்திலேயே வன்முறை நிறைந்த ஒன்றாக இருக்கப் போகிறது என்று அச்சப்படுவதில் நியாயம் இருக்கிறது.

[இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புச் சான்றிதழ் பெற திங்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். செயலக பதிவாளர் பிரிவில் பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

சான்றிதழ் வழங்குவதற்கு தேவையான புத்தகங்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

ஒவ்வொரு சான்றிதழிலும் ஒரு பிரதி மட்டுமே தற்போது வழங்கப்படும் என்றும்—

அவசர தேவை என்பதை நிரூபிக்க உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் அந்தப்பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

## கடலில் மிதந்து கொண்டிருந்த 1,740 அரிசி மூடைகள் கரை வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஏப். 20

முல்லைத்தீவு, மன்னியான் இறங்குதுறைக்குச் சமீபமாக நடுக்கடலில் ஒன்றரை மாத காலமாக இழுவைப் படகில் [பாஜ்] மிதந்து கொண்டிருந்த ஆயிரத்து 740 அரிசி மூடைகள் கரைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டு விட்டன.

கடந்த புதன், வியாழன் ஆகிய இரு நாட்களும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரின் மேற்பார்வையில் இந்த அரிசி மூடைகள் கரைக்குக் கொண்டுவரப்பட்டு இறக்கப்பட்டன.

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் கப்பலில் இந்த அரிசி மூடைகள் வந்து சேர்ந்த கையோடு அப்பகுதியில் [முல்லைத்தீவில்] ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் பல முறை முயன்றும், அரிசி மூடைகளை இறக்க முடியாமல் போய் விட்டது. [ஓ-3]

## போராளிகளின் புகழுடல்கள் ஆவரங்காலில் அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், ஏப். 20

நேற்று முன்தினம் மன்னார் பரப்புக்கடந்தானில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ரொக்கி [வரதலிங்கம் செல்வகுமார் — புத்தூர்] வீரமரணமடைந்தார்.

இவரது புகழுடலும் வீமன்காமத்தில் நேற்று மரணமான தங்கச்சி என்ற போராளியின் புகழுடலும் இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை ஆவரங்கால் நடராஜ ராமலிங்கம் வித்தியாலயத்தில் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் புகழுடல்கள் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். [உ]

## டாக்கா சிறையில் எர்ஷாத்!

டாக்கா, ஏப் 20

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் முகமட் எர்ஷாத் நேற்று டாக்கா மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

சாதாரண கைதி போன்றே அவர் நடத்தப்படுவார் என்று டாக்கா சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜெனரல் எர்ஷாத்தைச் சிறையில் அடைக்க வேண்டும் என்று மாணவர்கள் வற்புறுத்தி வந்தனர். அதனைத் தொடர்ந்தே இந்த இடமாற்றம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை — ஜெனரல் எர்ஷாத்தின் மனைவி வீட்டுக் காவலில் தொடர்ந்தும் வைக்கப்படுவார் என்று அறிவிக்கப்படுகிறது. அவர் மீதும் ஊழல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. [உ-எ]


## மரண அறிவித்தல்

### திரு. சு. சி. கதிரவேலு
[முன்னாள் உதவி அரசாங்க அதிபர்]

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சு. சி. கதிரவேலு [முன்னாள் உதவி அரசாங்க அதிபர்] 19-04-91 இல் காலமானார்.

இவர் தில்லைநாயகியின் அன்புக் கணவரும், பவானி [ஆசிரியை], நளினி [நெதர்லாந்து], ரஜனி [பேராதனை வளாகம்], சுதர்சனன், சுலோஜனி [யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரன் [தொழில்நுட்பவியலாளர் - சவூதி அரேபியா], சங்கர் [நிர்வாக அதிகாரி - நெதர்லாந்து] ஆகியோரின் மாமனாரும், சந்துருவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமச்சடங்கு [20-04-91] சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி லேன், திருநெல்வேலி.

தகவல்: க. சுதர்சனன் [மகன்]

[160505]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292ஆம் இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பெப்ரவரி மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஏப். 20

இலங்கை வங்கிக்கான பணம் கப்பலில் வந்து சேர்ந்ததும், பெப்ரவரி மாத ஓய்வூதியம் வழங்கப்படும்.

திங்கட்கிழமை வரும் என எதிர்பார்க்கப்படும் "கங்காசிறி" கப்பலில், இலங்கை வங்கிக்குரிய பணம் வந்து சேரலாம் என்றும்—

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் சம்பளக் கொடுப்பனவுக்குரிய பணம் பருத்தித்துறையில் வைத்தே பங்கிட்டு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## 2 போராளிகள் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 20

நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற வெடிவிபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மஞ்சளன் [சண்முகவேல் சத்தியசீலன் — நுவரெலியா] மரணமடைந்தார்.

இதேவேளை நேற்றுக் காலை 6 மணியளவில் வீமன்காமம் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் தங்கச்சி [முருகையா நிமலகாந்தன்— தெல்லிப்பழை] மரணமடைந்தார். [உ]

## வான் மீது ஹெலி சூடு!

தென்மராட்சி, ஏப் 20

நேற்று முன்தினம் மாலை 5 30 மணிக்கு வேம்பிராய் வழியாகச் சென்று கொண்டிருந்த வான் ஒன்றின் மீது ஹெலி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. எனினும் எவரும் காயமடையவில்லை.

இதேசமயம்—

அதே தினம் மாலை 6. 15 மணியளவில் பளை சந்தைக்கருகில் உணவுப் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த லொறியை நோக்கியும் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது. [ஓ-117]

## சடலம் கண்டுபிடிப்பு

புளியங்கூடல், ஏப். 20

தெற்கு அராலி கரையோர மாசவுள்ள பற்றை ஒன்றுக்குள் இருந்து நேற்று அழுகிய சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

வேலணை, 3 ஆம் வட்டாரம், செட்டிபுலத்தைச் சேர்ந்த ப. பொன்ராசா [52 வயது] என்பவரின் சடலம் அது என்று பின்னர் அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

தமது பிள்ளைகளுடன் தகராறு ஏற்பட்டு கடந்த ஒரு வாரத்திற்கு முன் இவர் வீட்டில் இருந்து வெளியேறி இருந்தார் என்று கூறப்பட்டது. [ஓ-125]

## தனது..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அறிவித்தது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த முன்னர் அரசு விதித்த நிபந்தனைகளை ஜனாதிபதி பிரேமதாசா நேற்றைய பேச்சின் போது கூறவே இல்லை என்பதையும் பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் சுட்டிக்காட்டி உள்ளது.

"விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவுத் தலைவர் திரு. பிரபாகரன் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும்" — ஆகிய இரு நிபந்தனைகளைக் ஏற்றுக் கொண்டால் மட்டுமே விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும் என்று ஜனாதிபதி பிரேமதாசா முன்னர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெடுமாறன் போட்டியிடார்

எதிர்வரும் சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் தெரிவிக்கிறார்.

தமிழர் தேசிய இயக்கத்தின் மாநில மாநாடு ஏப்ரல் 21 இல் தஞ்சையில் நடைபெறும் என்றும் அவர் சொன்னார்.

தமிழக சட்டசபைத் தேர்தலில் 3 ஆவது அணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக நான் பிரசாரம் செய்வேன்" என்றும் திரு நெடுமாறன் சொன்னார்.

தமிழர் தேசிய இயக்கம் பாட்டாளி மக்கள் கட்சி தமிழ் தேச பொதுவுடைமைக் கட்சி குடியரசுக் கட்சி ஆகியன ஒன்று சேர்ந்து 3 ஆவது அணியை அமைத்துள்ளன என்றும் திரு. நெடுமாறன் சொன்னார் [இ-எ]

## அ. தி. மு. க. - இ. காங்கிரஸ் கூட்டுத் தேர்தல் பிரசாரம்

சென்னை, ஏப். 20

தமிழகத்தில், இந்திரா காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணியின் தேர்தல் பிரசாரம் கடந்த வியாழக்கிழமை சென்னையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா மற்றும் கூட்டணியில் உள்ள தோழமைக்கட்சிகளின் தலைவர்கள் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கு பற்றினர். [இ-எ]

## பஞ்சாப் தேர்தல்களை காங்கிரஸ் பகிஷ்கரிக்கும்

பஞ்சாப்பில் நடைபெறவிருக்கும் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கப்போவதாக இந்திரா காங்கிரஸும், மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியும் அறிவித்துள்ளன.

இதேவேளை —

அஸாமில் மே 31, ஜூன் 3 ஆம் திகதிகளில் தேர்தல்களை நடத்தலாம் என்று அந்த மாநில ஆளுநரும் —

ஜூன் 20 இல் பஞ்சாப்பில் தேர்தல்களை நடத்தலாம் என்று அந்த மாநில ஆளுநரும் சிபார்சு செய்துள்ளனர். [ஓ எ]

## தமிழக மீனவர் விடயம்; ஜா கொழும்பில் பேசுவார்

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துன்புறுத்துவது தொடர்பாக கொழும்பு அரசுடன் இந்தியத் தூதர் என். என். ஜா பேச்சுக்கள் நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜா நேற்று சென்னையில் மாநில ஆளுநர் திரு. பீஷ்மநாராயண சிங்கைச் சந்தித்தார்.

அப்போது திரு. சிங் தமிழக மீனவர் விவகாரத்தை திரு ஜாவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## 'அட்லஸ்' விண்கலம் வானில் வெடித்துச் சிதறியது

வாஷிங்டன், ஏப். 20

ஜப்பானிய செயற்கைக் கோளை விண்ணில் செலுத்த எடுத்துச் சென்ற அமெரிக்காவின் 'அட்லஸ்' விண்கலம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வானில் வெடித்துச் சிதறி அத்திலாந்திக் கடலில் விழுந்தது.

மூன்று கோடி டொலர் பெறுமதியான செயற்கைக் கோளும் வெடித்துச் சிதறியது. அட்லஸ் விண்கலத்தின் பெறுமதி 10 கோடி டாலர் ஆகும்.

அட்லஸ் விண்கலம் பூமியில் இருந்து கிளம்பிய 6 நிமிடங்களில் அதன் ஒரு என்ஜின் வேலை செய்ய மறுத்தது. அதனைத் தொடர்ந்து அது வானில் வெடித்துச் சிதறியது. [உ-ஓ]

## ஒரே நாளில் 24 பேர் பலி!

புதுடில்லி, ஏப். 20

கடந்த 24 மணித்தியாலங்களில் பாரதிய ஜனதாக் கட்சியின் உள்ளூர் தலைவர் ஒருவர் உட்பட 24 பேர் சீக்கியத் தீவிரவாதிகளின் வன்செயல்களில் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## தமிழ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

12 வள்ளங்கள் என்பன எரிக்கப்பட்டன. 10 சைக்கிள்கள் நாசமாக்கப்பட்டன.

மூதூர், பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர், கட்டைபறிச்சான் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய படையினரே சூடைக்குடா, சம்பூர், இலக்கந்தை, கடற்கரைச் சேனை, சம்புக்களி, கூனித்தீவு, இத்திக்குளம் ஆகிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போதே அவர்கள் அடாவடித்தனமான செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## எதிரணி பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப் 20

ஜனாதிபதி பிரேமதாசாவின் நாடாளுமன்ற அங்குரார்ப்பண உரையை சுதந்திரக்கட்சி நவ சமசமாஜக் கட்சி உட்பட வேறு சில கட்சிகளும் பகிஷ்கரித்தன.

ஆனால் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் கலந்து கொண்டன. [ஓ-எ]

## மங்கி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வீரமரணம் அடைந்தனர்.

இராணுவத்தினரிடமிருந்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் கைப்பற்றினர். அவற்றின் விவரம் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி -1
- ★ அதற்குரிய ரம் மகஸின் -2
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி - 2
- ★ அதற்குரிய மகஸின் - 8
- ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி -2
- ★ அதற்குரிய மகஸின் - 8
- ★ ஐ. எம். ரவைகள் - 382
- ★ ஜே. ஆர். கைக்குண்டு -1

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது கப்டன் ரகுபதி [நல்லதம்பி தவசீலன் — கந்தளாய்], லக்ஸ்மன் [வேலாயுதம் சந்திரலிங்கம் - சீனன்குடா] ஆகியோரே வீரமரணமடைந்தனர் [உ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org